2005 பிப்ரவரி 3]

*முற்பகல் 10-35*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *வினா எண் 25, திரு. பி.ஆர். சுந்தரம், மாண்புமிகு கல்வி மற்றும் வணிக வரித் துறை அமைச்சர்.*

**25—**

**வகுப்பறைக் கட்டடங்கள்**

***53430—திரு. பி.ஆர். சுந்தரம்:**

*மாண்புமிகு கல்வி மற்றும் வணிக வரித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—*

*ராசிபுரம், திருவள்ளுவர் அரசு கலைக் கல்லூரிக்குக் கூடுதல் வகுப்பறைக் கட்டடங்கள் கட்டப்படுமா?*

**மாண்புமிகு திரு. சி.வி. சண்முகம், கல்வி மற்றும் வணிக வரித் துறை அமைச்சர்:** *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கூடுதல் கட்டடங்கள் கட்டும் செயற்குறிப்பு ஏதும் இல்லை.*

**திரு. பி.ஆர். சுந்தரம்:** *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழகத்தை இந்தியாவிலேயே முதன்மை மாநிலமாக ஆக்க அயராது பாடுபட்டுவரும் தமிழக முதல்வர் டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள், 2001-ல் மீண்டும் தமிழக முதல்வராகப் பொறுப்பேற்ற பிறகு, கல்வித் துறையின்மீது மிகுந்த அக்கறை கொண்டு, என்னுடைய ராசிபுரம் சட்டமன்றத் தொகுதியில் உள்ள திருவள்ளுவர் அரசு கலைக் கல்லூரியில் புதிதாக எம்.எஸ்.சி., பி.காம்., மற்றும் பி.ஏ., (தமிழ்) ஆகிய புதிய வகுப்புகள் தொடங்க உத்தரவிட்டுள்ளார்கள். இக்கல்லூரியில் சுமார் 1,400 மாணவ மாணவிகள் பயின்றுகொண்டிருக்கின்றார்கள். இக்கல்லூரியில் போதிய வகுப்பறைகள் இல்லாத காரணத்தினால் shift முறையில் வகுப்புகள் நடைபெற்று வருகின்றன. Shift முறையில் வகுப்புகள் நடைபெற்றாலும், போதிய கட்டட வசதி இல்லாத காரணத்தினால் மாணவ மாணவியர் பெரிதும் கஷ்டப்படுகின்றார்கள். இதைக் கருத்திலேகொண்டு மாண்புமிகு கல்வி அமைச்சர் அவர்கள், ராசிபுரம் அரசுக் கலைக் கல்லூரிக்குச் சிறப்புக் கவனம் செலுத்தி, புதிய வகுப்பறைகள் கட்டுவதற்குப் போதிய நிதியுதவி அளிக்க முன்வருவார்களா என அறிய விரும்புகின்றேன்.*

**மாண்புமிகு திரு. சி.வி. சண்முகம்:** *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ராசிபுரம் திருவள்ளுவர் அரசுக் கலைக் கல்லூரியில், மொத்தம்*

1,400 மாணவர்கள் பயில்கின்றனர். இதன் அடிப்படையில் 44 வகுப்பறைகள் தேவைப்படுகின்றன. தற்சமயம் 26 வகுப்பறைகள் உள்ளதால், இடப் பற்றாக்குறையின் காரணத்தால் முறை மாற்று முறையில் வகுப்புகள் நடைபெற்று வருகின்றன. 2003-2004 ஆம் நிதியாண்டில் அரசுக் கல்லூரிக் கட்டடங்களில், சிறப்புப் பழுதுபார்ப்பு மற்றும் பராமரிப்புப் பணிகளை மேற்கொள்வதற்காக அரசு ஒதுக்கீட்டிலிருந்து, ராசிபுரம் திருவள்ளுவர் அரசுக் கலைக் கல்லூரியில் அத்தியாவசியப் பணிகளை மேற்கொள்ள, ரூபாய் 6 இலட்சம் நிதி ஒதுக்கீடு செய்து பணி நடைபெற்றது. 2004-2005 ஆம் நிதியாண்டில் அரசு உறுப்புக் கல்லூரிகளில், கூடுதல் வகுப்பறை கட்டடங்கள் கட்டுவதற்கான செயல் திட்டம் ஏதும் இல்லை. ஆனால், மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கூறிய கருத்து, வருகின்ற நிதியாண்டில் பரிசீலிக்கப்படும் என்பதைக் கூறி, சட்டமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டு நிதியிலிருந்து மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் அத்தியாவசியத்தை முன்னிட்டு இந்த நிதியை ஒதுக்கீடு செய்து கொடுத்தால், கல்வித் துறை அதை ஏற்றுக்கொள்ளும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. பி.ஆர். சுந்தரம்.

**திரு. பி.ஆர். சுந்தரம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 2003 ஆம் ஆண்டிலே ராசிபுரம் அரசினர் கலைக் கல்லூரிக்கு, ரூபாய் 6 இலட்சம் நிதி ஒதுக்கப்பட்டுள்ளதாக மாண்புமிகு அமைச்சர் அவர்கள் குறிப்பிட்டார்கள். அந்த நிதி ஒதுக்கீடு செய்த, தமிழக முதல்வர் டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்களுக்கு தொகுதி மக்களின் சார்பாக நன்றியைத் தெரிவித்துக்கொள்கின்றேன். மேலும், 2004-2005 ஆம் நிதியாண்டில் கட்டடங்கள் கட்டுவதற்கான செயல் திட்டம் ஏதும் இல்லை என்று கூறினார்கள். மாண்புமிகு அமைச்சர் அவர்கள் கூறியபடி, 2004 ஆம் ஆண்டு, சட்டமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டு நிதியிலிருந்து ரூபாய் 3 இலட்சம் ஒதுக்கியிருக்கின்றேன். மேலும், அந்த நிதி, பற்றாத காரணத்தினால் வருகின்ற 2005 ஆம் ஆண்டு, அந்த வகுப்பறைகள் கட்டுவதற்கு அதிக நிதியை ஒதுக்கித் தர மாண்புமிகு அமைச்சர் அவர்கள் முன் வருவார்களா என அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. சி.வி. சண்முகம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சட்டமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டு நிதியிலிருந்து கூடுதல் கட்டடம் கட்டுவதற்கு நிதி ஒதுக்கீடு செய்ததற்கு நன்றியைத் தெரிவித்துக்கொள்கின்றேன். அதேபோல, வருகின்ற ஆண்டில் மாண்புமிகு உறுப்பினர் அவர்களுடைய கோரிக்கை பரிசீலிக்கப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.